மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : " தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலவரி வசூல் (திருத்த) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 5/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்து கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 12 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு நிலவரி வசூல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 5/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

[முற்பகல் 11—40]

7. அரசினர் தீர்மானம்

நிகழ்ச்சி நிரலில் மாற்றம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து நிகழ்ச்சி நிரலில் கண்ட அரசினர் சட்ட முன்வடிவு என்ற இனத்தின் கீழ் உள்ள 3, 4-க்குப் பதிலாக 5 ஆவது இனத்தை எடுத்துக் கொள்ளலாம். மாண்புமிகு அமைச்சர்.

திரு. என். சங்கரய்யா : அஜெண்டாவில் உள்ளதுபோல், எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்குத்தான் நாங்கள் தயாராக வந்திருக்கிறோம். திடீரென்று மாற்றியெடுத்துக்கொள்ளக் கூடாது. அஜெண்டாவில் உள்ளதுபோல் இருக்க வேண்டும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : அஜெண்டாவில் உள்ளபடி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்லிக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

1981 மார்ச் 2]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மேலவையில் இப்போது என்னுடைய சட்டமுன்வடிவு மட்டும்தான் இருக்கிறது. வேறு அமைச்சர்களின் சட்ட முன்வடிவுகள் இல்லை. ஆகவே, நான் மேலவைக்குச் சென்றுவிட்டு இங்கே வருவது வரை இந்த அவையும் நடக்க வேண்டும். மேலவையும் நடக்க வேண்டும் என்ற முறையில் நான் அங்கே போகிறபோது இங்கே வேறு அமைச்சரின் சட்ட முன்வடிவுகளை எடுத்துக் கொள்ளலாம். பாராளுமன்றத்தில் கூட இப்படி நடைபெற்றிருக்கிறது. அமைச்சர்களின் பில்களை மாறி மாறி எடுத்துக் கொள்வார்கள். ஆகவே, தங்கள் அனுமதியின் பேரில் என்னுடைய 3, 4, 6 ஆகிய இனங்களின் கீழ் உள்ள சட்ட முன்வடிவுகளை கொஞ்சம் பின்னால் தள்ளி வைக்கக் கோருகிறேன். மற்ற அமைச்சர்களின் சட்ட முன்வடிவுகளை எடுத்துக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : சட்ட முன்வடிவுகளை நிகழ்ச்சி நிரல் பட்டியல் வரிசையில்தான் எடுக்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சி சார்பில் இது குறித்து ஒரு கருத்து தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கெனவே, இன்னின்ன பில்கள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவித்து நாங்கள் அதற்கான தயாரிப்புகளோடு விவாதிப்பதற்கு வந்திருக்கிறோம். ஆகவே, எந்தவிதமான காரணமாக இருந்தாலும் அஜெண்டாவில் இல்லாத வேறு பில்களை எடுக்கிறபோது முன்னறிவிப்பு இல்லை. தயாரிப்பும் இல்லை என்ற நிலை ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அஜெண்டாவில் இல்லாததை எடுத்துக் கொள்ளப் போவதில்லை. போதிய முன்னறிவிப்புக் கொடுத்து, அஜெண்டாவில் சேர்க்கப்பட்டுள்ளதைத்தான் எடுத்துக்கொள்ள இருக்கிறோம்.

இப்போது எந்த மசோதாவை எடுத்துக் கொள்ளலாம், சொல்லுங்கள். (கூச்சல், குழப்பம்.)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மன்றங்களிலும் ஒரே அமைச்சர் பேச வேண்டியிருக்கிறது. . . . (குறுக்கீடு).

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இப்போது ரிஜிஸ்திரேஷன் சம்பந்தமான பில்லையும், அடுத்து ஸ்டேட் அவுசிங் போர்டு பில்லையும், அதற்கடுத்து வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் பில்லையும் எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்.)

[முற்பகல் 11-50]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிகழ்ச்சி நிரலிலே கண்டுள்ளபடி எடுத்துக்கொள்ள வேண்டியதுதான் முறை. இருப்பினும் இன்று ஏற்பட்டுள்ள தர்மசங்கடமான நிலைமை, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் மேலவையில் சட்ட முன்வடிவை நிறைவேற்ற வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள். ஒவ்வொரு அவையிலும் ஒரு சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுகிற போது அந்தச் சட்டமுன் வடிவின் சார்பிலே யார் அந்த பொறுப்பை ஏற்று நிற்கிறார்களோ அந்த அமைச்சரே பதில் சொல்வதை தான் மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர் பார்ப்பார்கள். ஆகவே, மேலவையிலே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களை எதிர்பார்ப்பது நியாயமானதும், பொருத்தமானதும் கூட, ஆக அந்த உணர்வுகளை மதித்து இந்த அவையிலே இந்த நிகழ்ச்சி நிரலை எந்த அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சங்கடம் இல்லாமல், அவைகளை கொண்டு வரலாம் என்கிற அடிப்படையிலே பார்த்தபோது இன்றைய நிகழ்ச்சி நிரலில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வர இருக்கிற இனங்கள் 3, 4, 6 என்ற சட்ட முன்வடிவுகளை நாம் பிறிதொரு நாளில் வைத்துக் கொள்ளலாம்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றைச் சார்ந்தவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப் போல், இந்த வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன் வடிவை வேறு ஒரு நாளிலே வைத்துக் கொள்ளலாம் என்று அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இன்று இங்கு நிறைவேற்றுவதாக இருந்த சட்ட முன் வடிவுகள் அதாவது இனங்கள் 3, 4, 6 ஆகியவையும், அதேபோல் வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவை நாம் இன்றைய நிகழ்ச்சி நிரலிலே கொண்டிருக்கிறோம். இவற்றை பிறிதொரு நாளில் வைத்துக்கொள்வது, இங்கே மாண்புமிகு அங்கத்தினர்கள் அனைவருக்கும் உகந்ததாக இருக்குமென்றும் கருதுகிறேன். காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும் அந்த கருத்தினைச் சொன்னார்கள். ஆகவே இந்தச் சட்ட முன்வடிவுகளை ஒத்தி வைத்துவிட்டு, நாம் இன்றைக்கு பத்திரப் பதிவுச் சட்டம், வீட்டு வசதி வாரிய சட்ட முன்வடிவு ஆகியவைகளை எடுத்துக் கொள்ளலாமென்று கருதுகிறேன். இது மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் சௌகரியமாக இருக்கும். மேலவைக்கு நாம் ஒரு கண்ணியத்தோடு அமைச்சர் அவர்களை அனுப்பி வைப்பதற்கு, அந்த ஜனநாயக கடமையை நிறைவேற்றுவதற்கு உகந்ததாக இருக்கும்.

எனவே, தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தல் என்ற தலைப்பின் கீழ் உள்ள 3, 4, 6 ஆகிய இனங்கள் இன்றைக்கு எடுத்துக் கொள்ளாது, ஒத்தி வைக்கப் பெற வேண்டும்."

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து ஏற்கெனவே பட்டியலில் இருக்கக் கூடிய மசோதாக்களை விட்டுவிட்டு வேறு மசோதாக்களை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்ற தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள், அதை எடுத்துக்கொள்வதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அதே நேரத்திலே ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு பட்டியல் அனுப்பப்பட்டு இருக்கிறது. அதிலே குறிப்பிட்டிருக்கிற மசோதாக்கள் தான் எடுத்துக்கொள்ளப்படுகின்றன என்ற முறையிலே அதற்கான தயாரிப்புக்களோடு உறுப்பினர்கள் வந்து பேசினால்தான் கருத்துக்களைச் சொல்ல சந்தர்ப்பம் ஏற்படுகிறது. புதிய மசோதாக்களை இப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறபோது என்னுடைய உரிமை இழக்கப்படுகிறது. எப்படியென்றால் நான் மசோதாவுக்கு திருத்தம் கொடுக்க வேண்டுமென்றால் 3 நாட்களுக்கு முன்னாலே கொடுத்தாக வேண்டும். ஆனால் இப்போது ஆய்வுக்கு அது எடுத்துக் கொள்ளப்படுகிற காரணத்தினால் நான் திருத்தம் இப்போது கொடுக்க முடியாது. 3 நாட்களுக்கு முன்னதாகக் கொடுத்தாக வேண்டும். ஆகவே முன்னறிவிப்பு இல்லை, தயாரிப்பு இல்லை: எப்படி நாங்கள் பேசமுடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். மேலவையிலே அமைச்சர் அவர்கள் போய் ஆற்ற வேண்டிய ஜனநாயகக் கடமை இருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டிய காரணத்தினால் அனுமதியுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மேற்கொண்டு அதைப்பற்றி விவாதிக்க அனுமதிக்க முடியாது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.